தி/கிண்/ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம்

தரம் 06

முதலாம் தவணைப் பரீட்சை - 2020

பெயர்-.....

விஞ்ஞானம்

நேரம்: 2.00 மணித்தியலயம்

பகுதி I

சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01) பின்வருவனவற்றுள் வளர்ச்சியைக் காட்டாத பொருள் எது?

1.மீன் 2. பக்றீரியா 3. பனை 4. றொக்கெற்

02) தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செயன்முறையின் போது வளிமண்டலத்துடன் சேரும் வாயு எது?

1. நைதரசன் 2. ஐதரசன் 3. ஒட்சிசன் 4. காபனீர்ரொட்சைட்

03) பழுதடைந்த பாணில் காணப்படும் நுண்ணங்கி வகை எது?

1. வைரஸ் 2. பக்றீரியா 3. பங்கஸ் 4. அமீபா

04) எல்லா உயிரங்கிகளுக்கும் பொது இயல்பாக அமையாதது?

1. வளர்ச்சி 2. சுவாசம் 3. ஒளித்தொகுப்பு 4. இனப்பெருக்கம்

05) யாதேனும் திரவியத்தை விரலினால் தொடும் போது உணரக்கூடியதன்மை?

1. மீள் தன்மை 2. இழையமைப்பு

3. நொருங்கும் இயல்பு 4. வாட்டத்தகுயல்பு

06) உயிருள்ள அங்கிகளின் பொதுவான இயல்பு பின்வருவனவற்றுள் எது?

1. சுவாசிக்கும் 2. இனப்பெருக்கம் அடையும்

3. அசைவைக் காட்டும் 4. மேற்கூறிய யாவும்

07) ஆய்வுகூடத்தில் காவனீரொட்சைட் வாயுவை இனங்காணப் பயன்படும் பதார்த்தம்

1. பல்மாணிக்கம் 2. தெளிந்த சுண்ணாம்பு நீர்

3. தேங்காய் எண்ணெய் 4. நீர்

08) திணிவை அளப்பதற்கான சர்வதேச நியம அலகு

1. கிராம் 2. மில்லிகிராம்

3. கிலோகிராம் 4. மேற்கூறிய யாவும்

www.ikedu.lk

09) உயிரங்கிகளில் சக்தி உற்பத்தி செய்யும் செயன்முறை

1. வளர்ச்சி 2. இனப்பெருக்கம் 3. போசனை 4. சுவாசம்

10) யாதெனும் பொருளில் அடங்கியுள்ள சடப்பொருளின் அளவு எவ்வாறு அழைக்கப்படும்

1. அடர்த்தி 2. திணிவு 3. சக்தி 4. கனவளவு

11) நீரின் பௌதீக இயல்பு அல்லாதது?

1. திரவநீர் 2. நீராவி 3. பனிக்கட்டி 4. இரசம்

12) பின்வருவனவற்றில் திண்ம நிலையில் காணப்படும் எரிபொருள் எது?

1. திரவப்பெற்றோலிய வாயு 2. மண்ணெண்ணெய் 3. விறகு 4. டீசல்

13) மாலை நேரத்தில் இலையைக் கூம்பும் தாவரங்கள்

1. அகத்தி, வாகை 2. மா, பனை

3. பலா, வேம்பு 4. கோரை, தொட்டாச்சிணுங்கி

14) உவர்திறன் கூடியநீர் எவ்வாறு அழைக்கப்படும்

1. உவர்நீர் 2. நன்னீர் 3. சவர்நீர் 4. கலங்கல் நீர்

15) திரவ நிலையில் காணப்படும் நீரிற்கு உதாரணமாக அமையாதது

1. அருவிகள் 2. ஆறுகள் 3. ஏரிகள் 4. பனியாறு

16) மிகக் குறைந்த அளவில் உப்புக்கள் கரைந்துள்ள நீர் அழைக்கப்படும் முறை

1. நன்னீர் 2. சவர்நீர் 3. உவர்நீர் 4. மேற்கூறிய யாவும்

17) பல சூரியகலங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்.

1. மின்கல அடுக்கு 2. சூரியபடலம் 3. சூரியகலம் 04. மேற்கூறிய யாவும்

18) புவிமேற்பரப்பில் காணப்படும் அங்கிகளினால் நுகரக்கூடிய நீரின் அளவு.

1. 2.58% 2. 97.41% 3. 0.01% 4. 100%

19) பிரதான சக்தி முதலாக அமைவது

1. சுவட்டு எரிபொருள் 2. உயிர்திணிவுகள் 3. சூரியன் 4. வீசும் காற்று

20) அங்கிகளின் உடலை குளிர்த்தும் இயல்புடைய பதார்த்தமாக அமைவது?

1. உப்பு 2. காற்று 3. எண்ணெய் 4. நீர்

www.lkedu.lk

பகுதி II

01. கீழே தரப்பட்ட கூற்றுக்களுள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் அடையாளமிடுக.

1. தாவரங்களிலும், விலங்குகளிலும் பச்சையம் எனும் நிறப்பொருள் காணப்படும் ( )
2. கண்ணாடி வெட்டுவதற்கு பயன்படும் திரவியம் வன்மைத் தன்மை கொண்டது. ( )
3. திரவமானது கொள்ளும் பாத்திரத்தின் வடிவத்தை எடுக்கும். ( )
4. சூரிய வெப்பம் சடப் பொருளிற்கு ஓர் உதாரணமாகும். ( )
5. தாவரங்களின் உட்சுவாச சளி காபனீரொட்சைட் ஆகும். ( )
6. உணவு பழுதடைதல் நுண்ணங்கியால் ஏற்படும் பாதிப்பாகும். ( )
7. விலங்குகளில் சுவாச அசைவை அவதானிக்க முடியும். ( )
8. அழுகும் பொருட்களில் நுண்ணங்கிகள் காணப்படமாட்டாது. ( )
9. உயிருள்ள உயிரற்ற இயல்பைக் காட்டும் நுண்ணங்கி வைரஸ் ஆகும். ( )
10. வெற்றுப் போத்தலினுள் சடப்பொருள் காணப்படுவதில்லை. ( )

02. எம்மைச் சூழவுள்ள உயிரற்றவைகளைப் பிரதானமாக இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

பேனா, வெப்பம், பனிக்கட்டி, ஒட்சிசன், ஒளி, மணல், காந்தப்புலம், மின்

1. மேலே தரப்பட்டுள்ளவைகளைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக?

சடப்பொருள்	சக்தி

2. மேலுள்ளவற்றில் வாயு நிலையில் காணப்படும் சடப்பொருள் எது?

.....

3. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக?

சடப்பொருள்	வடிவம்	கனவளவு
இரும்பு	திட்டமான வடிவம் உண்டு	a.
மண்ணெண்ணெய்	b.	திட்டமான கனவளவு உண்டு
நைதரசன் வாயு	c.	d.

www.kedu.lk

03. நீரானது ஓர் இயற்கை வளமாக கருதப்படுகின்றது.



1. ஆரம்பத்தில் பனிக்கட்டியின் பௌதீக நிலை யாது?

……

2. சிறிது நேரத்தின் பின் உமது அவதானம் யாது?

……

……

3. அவதானத்திற்கான காரணத்தை குறிப்பிடுக?

……

……

……

4. நீரின் பயன்பாடுகள் 04 தருக?

……

……

……

……

இயற்கையில் புவிக்கு நீர் கிடைக்கும் மூலங்களை குறிப்பிடுக?

……

……

……

5. உவர்திறன் அடிப்படையில் நீரின் வகைகளை குறிப்பிடுக?

……

……

……

www.lkedu.lk